[1994 ஏப்ரல் 27

## 4. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இன்னொரு பிரச்சினையை எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் பேரவை விதி 55-ல் கொடுத்திருக்கிறீர்கள். பேரவை விதி 55-ல் கொடுத்ததைப் பற்றி., (குறுக்கீடு) நீங்கள் என்னுடைய அறைக்கு வரவில்லை. என்னுடைய அறைக்கு வாருங்கள். (குறுக்கீடு) இந்த அவையிலே வந்து தெரிவிப்பேன் என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) பேரவை விதி 55-ல் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. சி. சுவாமிநாதன் : ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறைகேடாக இதையெல்லாம் பேசாதீர்கள். (குறுக்கீடு) எந்த விதியின் கீழ் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடு) பேரவை விதியில் எந்த விதியின் கீழ் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடு) பேரவையின் விதியில் எந்த விதியின் கீழ் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடு) அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) 55-ல் கொடுத்துவிட்டு, அவையிலே அனுமதிப்பதா, இல்லையா என்பது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. பேரவை விதி 55-லே கொடுத்ததை 7 நாட்களுக்குள் எடுக்கலாம் என்று இருக்கிறது. அதை நான் அனுமதிப்பதே கூட (குறுக்கீடு) இன்று தெரிவிப்பது ** பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் (குறுக்கீடு)

திரு. சி. சுவாமிநாதன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன் இப்போது பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் பேசிய எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது. இப்படி முறைகேடாக நடந்துகொள்வது முறையல்ல, உட்காருங்கள். நீங்கள் பேசக்கூடாது. (குறுக்கீடு) நேற்று எந்த விதியில் கொடுத்தீர்கள், சொல்லுங்கள்.

திரு. சி. சுவாமிநாதன் : நான் 55-லே கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 55-லே கொடுத்ததை மறுநாளே வந்து எழுப்ப முடியாது. (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) நீங்கள் 55-லே கொடுத்தது, அது எப்படி ஸ்பெஷல் மென்ஷனிலே வரும்? (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நீங்கள் கொடுத்திருக்கிற பிரச்சினை ** பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், அதற்கு விவரம் சேகரித்து அனுமதிப்பதா, இல்லையா என்பதையும், 55-லே அனுமதிப்பதைப் பற்றியும் நான் பிறகு சொல்கிறேன் என்று சொன்னேன். அதைப் பேரவையிலே வந்து எழுப்பிக் கொண்டிருப்பது சரியல்ல. (குறுக்கீடு) திரு. தம்புசாமி, நீங்கள் உங்கள் பிரச்சினையைக் கிளப்பலாம். (குறுக்கீடு)

*திரு. சி. சுவாமிநாதன்:* ** (குறுக்கீடுகள்)

*திரு. வே. தம்புசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...(குறுக்கீடுகள்)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அவர் பேசிய எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. அவர் முறைகேடாகப் பேசிக் கொண்டிருக்கும் எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. (குறுக்கீடு) நீங்கள் பேரவை விதி 55-ல் தான் கொடுத்திருக்கிறீர்கள் (குறுக்கீடு) ராமசுப்பு, உங்களுக்கு விதிகள் எல்லாம் தெரியும். (குறுக்கீடு) பேரவை விதி 55-ல் கொடுத்துவிட்டு, மறுநாளே பேரவையிலே எழுப்புவது என்பது (குறுக்கீடு) உங்களுடைய முறைகேட்டினுடைய போக்கைக் காட்டுகிறது.

முற்பகல் 11-20

*திரு. சி. சுவாமிநாதன் :* **

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* 55-ல் அனுமதிப்பதா, இல்லையா? என்பதை இன்றைக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் பேசிய எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது. (குறுக்கீடு) அது 55-ல் அனுமதிப்பதா, இல்லையா என்பது குறித்து. எவ்வளவு முறைகேடான முறையில் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் இங்கே நடந்து கொள்கிறார் என்பதற்கு இவையெல்லாம் நாட்டுக்கு உதாரணம். (குறுக்கீடு) இன்னொரு உறுப்பினரை அழைத்து இருக்கிறேன். நீங்கள் உட்காருகிறீர்களா, நடவடிக்கை எடுக்கவா? உட்காருங்கள். நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) சுவாமிநாதன் அவையை விட்டு வெளியேற வேண்டும். சுவாமிநாதன் அவையை விட்டு வெளியேற வேண்டும். சுவாமிநாதனை அவையை விட்டு அப்புறப்படுத்த காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

*திரு. சி. சுவாமிநாதன் :* ** (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இவ்வளவு முறைகேடான உறுப்பினர்தான் இந்த மாதிரியெல்லாம் (குறுக்கீடு) எப்படி அவையில் ஒரு பிரச்சினையை எழுப்புவது என்பதே தெரியாமல் உறுப்பினர் இருந்து கொண்டிருக்கிறார் என்றால் நான் என்ன செய்வது?

(திரு. சி. சுவாமிநாதன் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* பேரவை விதி 55-ல் கொடுத்ததை நான் இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, அதை அனுமதிக்க முடியுமா, இல்லையா என்பதை, அது ஒரு ** பிரச்சினையாக இருந்தால் பேரவையில் விவாதிப்பது நல்லது அல்ல என்று நான் நேற்று முழுமையாகச் சொன்னதற்குப் பிறகு (குறுக்கீடு) அவர் பேசியது எல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டது. இது பற்றிய பிரச்சினையை 55-ன் கீழ் திரு. சண்முகநாதன் அவர்களும் கொடுத்திருக்கிறார். அவர் பேசாமல் இருக்கிறார். (குறுக்கீடு) அதுவும் அவர் தொகுதியிலே இருக்கிற பிரச்சினை. 55-லே கொடுத்திருக்கிற காரணத்தால் அதை எடுத்து, என்றைக்கு பேரவை அஜென்டாவிலே வருகிறதோ அன்றைக்குத் தான் பேச முடியும்.

### 3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

#### (அ) புதுக்கோட்டையில் சத்துணவு ஊழியர்களின் ஊர்வலத்தில் போலீஸ் தடியடிப் பிரயோகம் செய்தது குறித்து—தொடர்ச்சி

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. வே. தம்புசாமி.

*திரு. வே. தம்புசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளை முன் வைத்து தமிழ்நாடு பூராவிலும் மறியல் செய்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் புதுக்கோட்டை மாவட்டத்திலேயும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே மறியல் நடைபெற்றது. அப்படி மறியல் செய்த சத்துணவு ஊழியர்களை காவல் துறையினர் கடுமையாகத் தாக்கி உள்ளார்கள். ** ஏறக்குறைய 40 பேருக்கு மேல் காயம் அடைந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) தகவலைச் சொல்லுகிறேன். இல்லையென்றால் நீங்கள் சொல்லுங்கள்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. தம்புசாமி, நீங்கள் என்ன கொடுத்திருக்கிறீர்களோ அதிலே மட்டும் பேசினால் நல்லது. தடியடி என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு மேற்கொண்டு போய்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.